தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2024

## வளர்தமிழ் II

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மண்ணுக்காய் உயிர்தந்த மாவீரனுக்கு நாட்டும் கல்

அ) சிற்பக்கல் ☐  ஆ) வைரக்கல் ☐
இ) சூளைக்கல் ☐  ஈ) நடுகல் ☐

2. தமிழாராய்ச்சி மன்றத்தைத் தோற்றுவித்தவர்

அ) தாவீது அடிகள் ☐  ஆ) கவுந்தி அடிகள் ☐
இ) விபுலாநந்த அடிகள் ☐  ஈ) தனிநாயகம் அடிகள் ☐

3. ஏழிலுக்குத் துணையாக வாசிக்கப்படும் தாள இசைக்கருவி

அ) வீணை ☐  ஆ) தவில் ☐
இ) வயலின் ☐  ஈ) உடுக்கு ☐

4. கருங்குழலி வந்தாள் என்பது

அ) அன்மொழித்தொகை ☐  ஆ) பண்புத்தொகை ☐
இ) வினைத்தொகை ☐  ஈ) உம்மைத்தொகை ☐

5. 'ஔ' என்ற உயிரெழுத்தின் இனவெழுத்து

அ) ஐ ☐  ஆ) ஊ ☐
இ) ஏ ☐  ஈ) உ ☐

6. எதிர்காலப் பன்மை வினைமுற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) படித்தான் ☐  ஆ) படிப்பான் ☐
இ) படிப்பர் ☐  ஈ) படித்தனர் ☐

7. எ என்ற எழுத்தின் மாத்திரை

அ) 1 ☐ ஆ) 1/ 2 ☐

இ) 2 ☐ ஈ) 1 1/2 ☐

8. திருக்குறள் உலகமக்களுக்காக எழுதப்பட்டது. ____________ அது பொதுமறை என அழைக்கப்படுகிறது.

அ) ஆனால் ☐ ஆ) அப்போது ☐

இ) ஏனெனில் ☐ ஈ) அதனால் ☐

9. ஏழு நரம்புள்ள வீணையின் இசை

அ) பண் ☐ ஆ) திறம் ☐

இ) அராகம் ☐ ஈ) தாளம் ☐

10. மாவுக்கு வடு போல வாழைக்கு

அ) கச்சல் ☐ ஆ) மூசு ☐

இ) கதிர் ☐ ஈ) குரும்பை ☐

11. அல்வழித்தொகை ____________ வகைப்படும்.

அ) ஆறு ☐ ஆ) நான்கு ☐

இ) ஐந்து ☐ ஈ) இரண்டு ☐

12. அபிசேகம் என்ற வடசொல்லின் தூய தமிழ்ச்சொல்

அ) பூசை ☐ ஆ) நீராட்டு ☐

இ) வழிபாடு ☐ ஈ) பாராட்டு ☐

13. வாடிய பயிர் இதில் வாடிய என்பது

அ) பெயரெச்சம் ☐ ஆ) பெயர்ச்சொல் ☐

இ) வினையெச்சம் ☐ ஈ) வினையடை ☐

14. "செந்தாமரை விரியத் தேமாங் கொழுந்தொழுக" வந்தது

அ) கார்காலம் ☐ ஆ) முதுவேனில் ☐

இ) இளவேனில் ☐ ஈ) குளிர்காலம் ☐

15. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஒப்புயர்வற்ற காவியம்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) மணிமேகலை ☐

இ) குண்டலகேசி ☐ ஈ) இராவணகாவியம் ☐

16. உயிர்க்கொடைப் போராட்டத்தின் மூலம் ஈழத்தமிழருக்கு "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்ற செய்தியைச் சொன்னவர்

அ) விக்டர் ☐ ஆ) திலீபன் ☐

இ) மில்லர் ☐ ஈ) சங்கர் ☐

17. முன்றில் என்பது

அ) அரங்கு ☐ ஆ) சந்தி ☐

இ) முற்றம் ☐ ஈ) மன்று ☐

18. தொல்பழங்காலத்தில் குமரிக்கண்டம் எனப்பட்ட தமிழகத்தின் ஆட்சித் தலைநகர்

அ) அநுராதபுரம் ☐ ஆ) பொலநறுவை ☐

இ) சனநாதமங்களம் ☐ ஈ) இலங்கை ☐

19. வாடும் பயிருக்கு வான்மழை போல என்ற உவமைத்தொடர் விளக்குவது

அ) உரியநேரத்தில் உதவுதலை ☐

ஆ) காக்க வேண்டியவனே அழிப்பதை ☐

இ) தன் ஆற்றல் இழந்த நிலையை ☐

ஈ) பயனற்ற செயலை ☐

20. ஒருவருடைய கூற்றை விளக்கும் இடங்களில் இடப்படும் நிறுத்தற் குறியீடு

அ) காற்புள்ளி ☐ ஆ) முக்காற்புள்ளி ☐

இ) அரைப்புள்ளி ☐ ஈ) முற்றுப்புள்ளி ☐

21. கலக்கம் என்பதன் எதிர்ச்சொல்

அ) மறதி ☐ ஆ) ஏற்றம் ☐

இ) தெளிவு ☐ ஈ) தேய்தல் ☐

22. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஏழு ☐ ஆ) எஃகு ☐

இ) ஏடு ☐ ஈ) எது ☐

23. சுட்டெழுத்துகளில் ஒன்று

அ) எ ☐ ஆ) இ ☐

இ) யா ☐ ஈ) ஏ ☐

24. சிலப்பதிகார வாழ்த்துப்பாவில் இளங்கோவடிகள் வாழ்த்துவது

அ) இயற்கையை ☐ ஆ) இறைவனை ☐

இ) வேந்தரை ☐ ஈ) தமிழை ☐

25. இடைநிலையையும் விகுதியையும் இணைக்கும் சொல் உறுப்பு

அ) சந்தி ☐ ஆ) சாரியை ☐

இ) பகுதி ☐ ஈ) வினையடி ☐

26. கோவலன் காற்சிலம்பை விற்கச் சென்ற இடம்

அ) மதுரை ☐ ஆ) பூம்புகார் ☐

இ) காஞ்சி ☐ ஈ) வேலூர் ☐

27. கட்டுவித்தான் என்ற பிறவினையின் வினையடி

அ) கட்டு ☐ ஆ) கட்டுகிற ☐

இ) கட்டி ☐ ஈ) கட்டுவி ☐

28. யாழ்நூலகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டு

அ) 1959 ☐ ஆ) 1954 ☐

இ) 1958 ☐ ஈ) 1956 ☐

29. முள்வேலி பயிரைக் காப்பது போல மக்களது உள்ளம் மகிழும்படி உயர் காப்பு வழங்கிய மன்னன்

அ) சூரத்தீசன் ☐ ஆ) துட்டகெமுனு ☐

இ) மாயாதுன்னை ☐ ஈ) இராவணன் ☐

30. கோவலன் பெண்ணாக உருவகித்துப் பாடிய ஆறு

அ) கங்கை ☐ ஆ) யமுனை ☐

இ) காவேரி ☐ ஈ) சிந்துநதி ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்கில் அமைந்துள்ள கடற்கரைச் சிற்றூர்களில் முள்ளிவாய்க்காலும் ஒன்று. இக்கிராமம் கிழக்கே இந்துமா கடலையும் மேற்கே நந்திக் கடலையும் தெற்கே வட்டுவாகல் கிராமத்தையும் கொண்டுள்ளது. இவ்வூரின் வெண்மணற் கடற்கரை, மனதைக் கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்தது. அத்துடன் நெல்விளையும் வயல்களையும் மீன்வளம் நிறைந்த கடலையும் கொண்ட வளமான சிற்றூர் இதுவாகும். வளம் நிறைந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலே மே 2009 இல் இறுதிக்கட்ட ஈழப்போர் நடைபெற்றது. இப்போரின் போது முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயமாக இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டது. தமிழ்மக்கள், தம் உயிருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என இலங்கை அரசை நம்பி பாதுகாப்பு வலயத்தினுள் அடைக்கலம் புகுந்தனர். இவ்வாறு அடைக்கலம் புகுந்த குழந்தைகள், முதியோர், நோயுற்றோர் என பல்லாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மிகக் கொடூரமான முறையில் கொத்துக்கொத்தாக குண்டுகள் வீசப்பட்டுக் கதறக்கதறக் கொல்லப்பட்டனர். மாந்தநேயமற்ற இந்த இனப்படுகொலையை ஐ.நா முதற்கொண்டு உலகநாடுகள் எதுவுமே கண்டிக்கவில்லை. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தமிழினத்திற்கு தீராத வலியையும் மாறாத வடுவையும் தந்தது. பல்லாயிரம் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட மே 18 ஈழத்தமிழராலும் உலகத் தமிழராலும் ஒவ்வோர் ஆண்டும் நினைவு கூரப்படுகிறது.

1. தம் உயிருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என இலங்கை அரசை நம்பிய தமிழ்மக்கள் எங்கே அடைக்கலம் புகுந்தனர்?

______________________________________________

______________________________________________

2. முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயமாக எந்த அரசினால் அறிவிக்கப்பட்டது?

______________________________________________

______________________________________________

3. ஒவ்வோர் ஆண்டும் ஈழத்தமிழராலும் உலகத் தமிழராலும் நினைவு கூரப்படும் நாள் எது?

______________________________________________

4. முள்ளிவாய்க்கால் எவ்வளங்களைக் கொண்ட சிற்றூராகும்?

______________________________________________

______________________________________________

5. எது தமிழினத்திற்கு தீராத வலியையும் மாறாத வடுவையும் தந்தது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தமிழ் மன்னனான எல்லாளன் யாரைப் போரில் வென்று 44 ஆண்டுகள் நல்லாட்சி செய்தான்?

_______________________________________________

2. இராவணகாவியத்தை எழுதியவர் யார்? அவர் எந்நாட்டவர்?

_______________________________________________

3. குமரிக்கண்டத்தில் வளம் பெருக்கிய ஆறுகள் எவை?

_______________________________________________

4. “நானும் கொஞ்சம் ஏழையடி

நடவு கொஞ்சம் செறுத்துப்போடு” என்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

_______________________________________________

5. ஆப்கானிய கைபர் கணவாய் ஊடாக நாவலந்தீவினுள் நுழைந்தவர் யார்?

_______________________________________________

6. “ஓடி நேர் புடிச்சு ஒரு கூடை கொழுந்து எடுக்க” என்ற பாடல் எவ்வகைப் பாடல்?

_______________________________________________

7. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் எந்த நகரத்தில் நடைபெற்றது?

_______________________________________________

புள்ளிகள் 10

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1.



2. இனிமை நிறைந்த எங்கள் மொழி
இன்சுவை ஊட்டும் எம் தாய்மொழி

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

கார்காலம் வந்தது. குளிர் காற்று வீசியது. மழை கொட்டத் தொடங்கியது. வாடிக்கிடந்த விளைபயிர்கள் மதர்த்துச் செருக்கொடு தலை நிமிர்ந்து நின்றன. மாவும் பலாவும் மலர்களைச் சொரிந்தன. பொய்கையில் அல்லியும் ஆம்பலும் நிறைந்திருந்தன. காடும் பூத்தது. நாடும் பூத்தது. வீடு தோறும் முல்லை, செவ்வந்தி போன்ற மலர்கள் மலிந்தன. அவை தளதளவெனச் செழித்து வளர்ந்திருந்தன. அதனால் நறுமணம் எங்கும் கமழ்ந்தது.

1. வினைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

2. இங்கு இடம்பெற்றுள்ள ஆகுபெயர் எவ்வகை ஆகுபெயர் என எழுதுக.

_______________________________________________

3. மூன்றாம் வேற்றுமை உருபேற்ற சொல் ஒன்று எழுதுக.

_______________________________________________

4. எழுவாய் அடைமொழி இடம்பெற்றுள்ள சொல்லியம் ஒன்று தருக.

_______________________________________________

5. உரிச்சொல்லுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

6. காற்று எவ்வகைக் குற்றியலுகரம்?

_______________________________________________

7. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

8. தொடங்கியது என்ற சொல்லின் வினையடி என்ன?

_______________________________________________

9. நெடிற்றொடர்க்குற்றியலுகரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

10. சுட்டுச்சொல் ஒன்று எழுதுக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் சொற்களில் உள்ள இனவெழுத்துகளைக் கண்டறிந்து எழுதுக.**

| | |
|---|---|
| பம்பரம் ______________ | பொங்கல் ______________ |
| மஞ்சள் ______________ | பந்தம் ______________ |
| மண்டபம் ______________ | மன்றம் ______________ |

புள்ளிகள் 03

**2. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.**

ஆறாம் வேற்றுமைத்தொகை ______________________

உயிர்முன்மெய் புணர்தல் ______________________

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

வல்லவனுக்குப் நாப்பழக்கம்
தொட்டிற்
அடுப்பங்கரை
சுடுகாடு அறியுமா
சூடு
சித்திரமும்
ஆயுதம்
மட்டும் கண்ட
கைப்பழக்கம்
நாடாது
பழக்கம் வாசனை புல்லும்
செந்தமிழும்
பூனை கற்பூர கழுதை

1. சிறப்பு அறியா இயல்பு.

______________________________

2. பட்டறிவு பயன் தரும்.

______________________________

3. திறமையின் ஆற்றல்.

______________________________

4. எதுவும் பயிற்சியால் இயலும்.

______________________________

5. பழக்கத்தின் வலிமை.

______________________________

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

சில ஆண்டுகளாக உலகின் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. உலகின் வெப்பநிலை படிப்படியாகக் கூடிக்கொண்டே வருகிறது. இக்காரணத்தால் பூம்பனி கொட்டுவதும் நின்றுவிட்டது. இதனால் நுண்ணுயிரிகள் அழியாமல் பெருகி வருகின்றன. இக்காலநிலை மாற்றத்தினால் பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்பட்டு உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்து வருகின்றது.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ நாட்டார்பாடல்கள்
- ✸ சிலப்பதிகாரம்
- ✸ தமிழீழம் தன் கதை கூறல்
- ✸ வறுமையின் கொடுமை

புள்ளிகள் 15